IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | SOP. No. | | 1/2024 |
| | | P/W's | : | PW1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | R. முருகேசன் | CASTE | : | |
| S/O | ராமையா | RELIGION | : | இந்து |
| VILLAGE | தென்கரை பெரியகுளம் | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 61 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.11.2025**

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் எனது அண்ணன் அய்யம்பெருமாளின் வாரிசு சான்றிதழ் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன். அவர் இறக்கும்போது கல்லணை கிராமம், அலங்காநல்லூரில் குடியிருந்தார். ம.சா.ஆ.6 ஆவணத்தில் அய்யம்பெருமாளின் முகவரி என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அய்யம்பெருமாள் எனது அண்ணன் என்பதைக்காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அய்யம்பெருமாளுக்கு திருமணம் ஆகிவிட்டது, குழந்தைகள் இல்லை.

2. எனது அப்பா ராமையாவிற்கு என்னையும் சேர்த்து நான்கு பிள்ளைகள், அதில் 2 பெண் பிள்ளைகள் சிறுவயதிலேயே இறந்துவிட்டார்கள். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள்படி எனது அனைத்து முகவரியிலும் பெரியகுளத்தில்தான் உள்ளது என்றாலும் அய்யம்பெருமாள் அலங்காநல்லூரில் வைத்து இறந்ததால் இந்த நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.6 ஆவணத்தின்படி அய்யம்பெருமாளின் முகவரியும் நான் மனுவில் கூறியுள்ள முகவரியும் மாறுபாடாக உள்ளதால் என்னுடைய அண்ணன் அய்யம்பெருமாள் ம.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள அய்யம்பெருமாள் கிடையாது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாலுகா அலுவலகத்தில் வாரிசு சான்றிதழ் கேட்டுகொடுத்த மனுவை என்ன காரணத்தினால் மனுவை தள்ளுபடி செய்தார்கள் என்றால் என்னுடைய மனுவை வாங்கவில்லை.

4. நான் முறையாக தாலுகா அலுவலத்தில் மனு கொடுத்திருந்தால் எனக்கு வாரிசு சான்றிதழ் கிடைத்திருக்கும் என்றாலும் நான் சட்டப்படியான வழிமுறையை பின்பற்றாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/−M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி